# முதல் அறிவுரை இதுவே

கேளுங்கள் கேளுங்கள் கேளுங்கள்!

மனதை மகிழ வைக்கும் புனித குரலை கேளுங்கள்! – 2

அவர் முதலில் சொன்ன அறிவுரை இதுவே – நல்

அறிவுரை இதுவே

தூய்மையான உள்ளம் கொண்டிரு!

அன்பு நிறைந்த உள்ளம் கொண்டிரு!

பிரகாசம் நிறைந்த உள்ளம் கொண்டிரு! – 2

இதயம் ஒரு பொக்கிஷம் – அதில்

இறைவன் பரிசோ ஏராளம் – 2

உலகப் பற்று என்னும் தீயில் இருந்து

பரிசைக் காக்க வேண்டும் – அந்த

பரிசைக் காக்க வேண்டும்.

# நீதி தான் வழி

நீதிதான் வழி நீதிதான் வழி – 3
ஒனி மிகுந்த ஒரு நாள் வர நீதிதான் வழி
உலகம் விரும்பும் அந்நாள் வர நீதிதான் வழி
நீதி தான் ஒளி நீதி தான் ஒளி
நல்ல செயல்கள் முலம் மின்னும் அந்த நீதி தான் ஒளி

எத்தனை முறை கேட்டிருப்போம் . . .
தன் உடமைகளை அனைவருடன்
பகிர்ந்து கொண்டார் அப்துல் பஹா
குறைவானதிலே நிறைவை கண்டார்
எளிமையிலே இன்பம் கண்டார்
இதனால் பலர் பயனும் கண்டார் – 2
நீதி என்பது நியாயம் என்ற படிக்கும் மேலே
உயர்ந்து நிற்பது
நாம் இருப்பதை கொடுப்பதும் விருப்பத்தை
துறப்பதும் நீதி! நீதி! நீதி!

# அன்பு கொள்வாய்

அன்பு கொள்வாய் அன்பு கொள்வாய்
அனைவரிடத்திலும் அன்பு கொள்வாய்
அன்பில் தானே அன்பில் தானே – .இந்த
அகிலம் ஆரம்பம் ஆனது
(அன்பு . . .)

ஆண்டவன் படைப்பை நேசித்தார்
ஆகவே – உன்னைப் படைத்திட்டார்
அவரின் மீதும் அனைவர் மீதும்
(அன்பு கொள்வாய்)
அன்பு அன்பு – (4)

# உண்மை பேசும் போது

உண்மை பேசும் போது – மக்கள்
உன்னை நம்புவார்கள் – 2
உண்மை பேச வேண்டும் எப்போதும்
எப்போதும் உண்மை பேச வேண்டும்
(உண்மை . . .)

உண்மை பேசும் போது அவமானம் என்பதில்லை
நன்மை பலவும் செய்வார் இறைவன்
இறைவன்
(உண்மை . . .)

பொய்மை நீயும் சொன்னால்
பழி சொல்லும் வந்து சேரும் – நல்ல
நண்பர் கூட்டம் எல்லாம்
உன்னை விட்டு போகும்.

## தாராளமனப்பாண்மை எனும் நீரூற்று

நீரூற்று போல நீயும் இரு!
நீரோடைப் போல நீயும் இரு!
இது போல் இருந்தால் உனக்கு
இன்பம் என்றும் தான்
இதயத்தைக் கேட்டு இதயத்தைக் கேட்டு
இருப்பதைக் கொடுப்பாய் இன்பங்கள் பெறுவாய்
இதயத்தைக் கொடுத்து
ஆன்மாவைக் கொடுத்து
இன்பத்தைப் பெறுவதே
உந்தன் இலக்கு
(நீரூற்று . . .)

# உங்கள் சகோதரரரே மேம்பட்டவரென தேர்ந்தெடு

எனக்கும் தாகம் எனக்கும் தாகம்

ஆனால் எனது தம்பிக்கும் தான்

அவனுக்கு முதலில் கொடுத்திடுவேன்

ஆனந்தம் அதிலே அடைந்திடுவேன்

அடுத்தவர் தேவைக்கு முதலிடம் தருவோர்

ஆசிகள் பெற்று மகிழ்ந்திடுவார் – 2

லாலலாலலால . . .

எனக்கும் பசிதான் எனக்கும் பசிதான்

ஆனால் எனது தங்கைக்கும் தான்

அவளுக்கு முதலில் கொடுத்திடுவேன்

ஆனந்தம் அதிலே அடைந்திடுவேன்

(அடுத்தவர் தேவைக்கு . . .)

லாலலாலலால . . .

# மகிழ்ச்சி நமக்கு சிறகுகளை அளிக்கிறது.

பறக்க சிறகை கொடுக்கும் மகிழ்ச்சி
குழு : சிறகைக் கொடுக்கும் மகிழ்ச்சி
பறக்க சிறகை கொடுக்கும் மகிழ்ச்சி
குழு : சிறகைக் கொடுக்கும் மகிழ்ச்சி

மகிழ்ச்சி வேளையில் நம் பலமும் பெருகுது
மகிழ்ச்சி வேளையில் நம் அறிவும் உயருது
மகிழ்ச்சி வேளையில் நம் புரிந்துணர்வு ஒளிரும் – 2
(பறக்க சிறகை கொடுக்கும் . . .)

துன்பம் வந்தபோது நம் பலமும் குறையுது
தூரமாகுது நம் அறிவுப்பார்வை அதுவும்
தொலைந்து போதுமே தூய சிந்தனைகளும் – என்றாலும்
(பறக்க சிறகை கொடுக்கும் . . .)

மகிழ்ச்சியிலே பலம் பெருகும்
மகிழ்ச்சியிலே அறிவு உயரும்
மகிழ்ச்சியில் புரிந்துணர்வு ஒளிரும் – 2
(பறக்க சிறகை கொடுக்கும் . . .)

# பூமியைப் போல் இருப்பீர்

பூமியப்பாரு பூமியப்பாரு

பணிவாய் இருக்கு–அது

பணிவாய் இருக்கு

இந்த ஊருக்குத் தேவையானதெல்லாம்

உள்ளே இருக்கு–அதன்

உள்ளே இருக்கு

அதன் மேலே நடக்க தன்னை

நமக்குத் தருது – 2

ஆனாலும் சொன்னதில்லை

நான் உயர்ந்தவன் என்று – எல்லாம்

என்னிடம் உண்டு – 2

தானனனான தானனனான . . . 8

மரத்தைப்பாரு மரத்தைப் பாரு

பணிவாய் இருக்கு–அது

பணிவாய் இருக்கு

குலைகுலையாய் கனி வந்தாலும்

பணிந்தே வருது–கிளை

குனிந்தே வருது – 2

ஆனாலும் சொன்னதில்லை

நான் உயர்ந்தவன் என்று

எல்லாம் என்னிடம் உண்டு – 2

தானனனான தானனனான . . . 9

பூமியப் போல பூமியப் போல

நாமும் இருக்கணும்–அட

நாமும் இருக்கணும்

கனி மரத்தப் போல மரத்தப் போல

வாழ்ந்து காட்டணும் – நாமும்

வாழ்ந்து காட்டணும்

பணிவை நம் சிறகாக்கி பறந்து செல்லணும்

மேலே பறந்து செல்லணும் – 2

தானனனான தானனனான . . .

# நன்றி சொல்ல வேண்டும்

நன்றி நன்றி நன்றி நன்றி நன்றி நன்றி
எந்தன் சிரகில் கருணையின் மகுடம்
ஏற்றி வைத்ததற்கு நன்றி
என்றும் நன்றியில் இதயம் இருக்க
கருணை மகுடம் ஒளியால் ஒளிரும்
(நன்றி . . .)

அன்பும் அறிவும் இதயம் தன்னில்
அருளித் தந்ததற்கு நன்றி – 2
என்றும் நன்றியில் இதயம் இருக்க
அது–நன்றாய் நாளும் வளர்ந்து செழிக்கும்
(நன்றி . . .)

உண்மை ஒளியால் உள்ளக் கண்கள்
ஒளி பெறச் செய்ததற்கு நன்றி – 2
என்றும் நன்றியில் இதயம் இருக்க
அது–உந்தன் அருள் மழை பொழியும்
இறைவா
(நன்றி . . .)

## ஒருவரை ஒருவர் மன்வீப்போம்

ஒருவரை ஒருவர் மன்னிப்போம்
உள்ள அன்புடன் இருப்போம்
ஒரு நாளும் இதை மறவாமல் – நம்
மனதில் இருத்துவோம்

ஒருவரை ஒருவர் மன்னிப்போம்
கருணை காட்டிடுவோம்
ஊறு தருகின்ற எதிரிகளிடமும்
அன்பாய் இருப்போம்

உள்ளத்தில் மன்னிக்கும்
தன்மை இருந்தால்
ஒவ்வொருவரிலும் நல்லவை தெரியும்
உள்ளத்தில் அற்புத
உணர்வும் பெருகும்.
(ஒருவரை . . .)

மன்னிக்கும் கண்கள்
குற்றங்கள் மறைக்கும்
மற்றவர் தவறை
காணாது இருக்கும்
மற்றவர் நம்மை
மன்னிக்கும் போது
மனதில் மகிழ்ச்சி

செழிந்தே ஓங்கும்

“மன்னிப்பை உந்தன் அணிகலனாக்கு“

என்பது பஹாவுல்லா தந்திட்ட வாக்கு

கருணை என்பது களிப்பைத் தருமே கடவுள் விரும்பும் மனிதருக்கு

(ஒருவரை . . .)

# வாய்மை

வாய்மையென்னும் பண்பு தானே ஒளி மிகுந்தது
சூரியனின் ஒளியை விட ஒளி மிகுந்தது
ஓ! மக்களே ஓ! மக்களே
வாய்மையினால் நாவுகளை அழகு படுத்துவீர் – 2
அனைவரது ஆன்மாவையும் அழகு படுத்தவே
நேர்மை என்னும் ஆபரணம் நமக்கு தேவையே
நேர்மை என்னும் பண்பு தானே ஒளி மிகுந்தது
சூரியனின் ஒளியை விட ஒளி மிகுந்தது.

# நியாயமாய் இரு

நியாயமாய் இரு நியாயமாய் இரு
யாவரும் நலன் பெற பாடுபடு
நியாயமாய் இரு நியாயமாய் இரு
யாவரும் நலன் பெற பாடுபடு
நியாயமாய் பிறருடன் நடந்திடும் போது
நம்பிக்கைக் கொள்வார் சகோதரர் எல்லாம்
உலகத்தின் பொருட்களை சமமாய் பகிர்ந்தால்
ஒளிர்ந்திடும் நீதியும் பூமியில் காண
நியாயமாய் பிறருடன் நடந்திடும் போது
நம்பிக்கைக் கொள்வார் சகோதரர் எல்லாம்
உலகத்தின் பொருட்களை சமமாய் பகிர்ந்தால்
ஒளிர்ந்திடும் நீதியும் பூமியில் காண
நியாயமாய் இரு நியாயமாய் இரு
யாவரும் நலன் பெற பாடுபடு
நியாயமாய் இரு நியாயமாய் இரு
யாவரும் நலன் பெற பாடுபடு
நலனும் உதவியும் நீ வழங்க
நடக்கிறாய் நீ குருநாதரின் பாதை
வார்த்தை செயல்களில் நீதி விவேகம்
வரச்செய்யும் மகிழ்ச்சியை இதயத்திலெல்லாம்
நலனும் உதவியும் நீ வழங்க
நடக்கிறாய் நீ குருநாதரின் பாதை
வார்த்தை செயல்களில் நீதி விவேகம்

வரச்செய்யும் மகிழ்ச்சியை இதயத்திலெல்லாம்

நியாயமாய் இரு நியாயமாய் இரு

யாவரும் நலன் பெற பாடுபடு

நியாயமாய் இரு நியாயமாய் இரு

யாவரும் நலன் பெற பாடுபடு

நியாயமாய் இரு நியாயமாய் இரு

யாவரும் நலன் பெற பாடுபடு

யாவரும் நலன் பெற பாடுபடு

# என் பங்கினை எனக்கு அருள்வீர்

எனது பங்கை பொழிந்திடுவீரோ
இறைவா என் இறைவா

எல்லாம் நலமாய் இருக்கும்போது
இதயமும் திருப்தியில் இருப்பது சுலபம்
எல்லா வசதியும் இருக்கும்போதும்
இதயம் திருப்தியில் இருப்பது சுலபம்
ஆனால் நெருக்கடி நேரத்திலே
அப்படி இருப்பது கஷ்டம் – 2
அப்போது நாம் இப்படி பாடலாம்
(எனது பங்கை . . .)

சிறுவராக இருந்த போதிலிருந்தே – பல
சிரமங்களை தாங்கிக் கொண்டார் குருநாதர்
பாலக பருவத்திலிருந்து பல வசதிகள் அவருக்கு இல்லை
எனினும் அவருள் திருப்தி இருந்தது
இறைவனின் விருப்பத்தில் ஏற்பு இருந்தது
(எனது பங்கை . . .)

# துணிவின் பிறப்பிடம்

துணிவுக்கும் சக்திக்கும் தோற்றுவாய்
ஆண்டவன் மொழியை உயர்த்துதல்
துணிவுக்கும் சக்திக்கும் தோற்றுவாய்
அவர் அன்பில் நாம் கொள்ளும் உறுதியாம்

உங்களை மறந்திடுங்கள் – 2
உண்மையில் உறுதியாய் நின்றிடுங்கள்
அவரது வலிமை கொண்டே
ஆதரவற்றோரைக் காத்திடுங்கள்

இறைமொழி கூறுங்கள்
என்றென்றும் செயலில் நில்லுங்கள்
எந்நாளும் அவர் வழியே
இன்பத்தைக் காட்டும் நம்புங்கள்

(துணிவுக்கும் . . .)

## நம்பிக்கை கொண்டிருங்கள்

நாளை நடப்பது என்னவென்று நமக்கு எதுவும் புரிவதில்லை

ஆயினும் ஆசிகள் குறைவதில்லை, ஆக்கு உம் பாதையை இரையை நம்பி

நம்பிக்கை நம்பிக்கை நாளும் கொண்டிருங்கள், நாடெங்கும் இறைவனின் ஆசியை கண்டிடுங்கள்

சூரியன் எழுந்திடும், வானத்தை நிறைத்திடும், கண்களில் எதிர்ப்பார்ப்புடன் – அவரை

காணுவோம் நம்பிக்கையாய்.

வளர பாடுபடு நம்பிக்கையாய், வழிவிடும் குளிர்காலம் வசந்தத்திற்கே

அவரின் ஆசிகள் குறைவதில்லை, அதுவே உயிர்தரும் அனைத்துக்குமே

நம்பிக்கை நம்பிக்கை..........

அமைதி மகிழ்ச்சியின் ஊற்றாயிரு, ஆன்ம ஒளிர்வுக்கு சேவையாற்று

ஆசி ஓய்வதில்லை அகமேற்று, அடுத்த நாளை நீ நம்பி போற்று

நம்பிக்கை நம்பிக்கை..........

## சுறுசுறுப்பான கரங்கள்

சுறுசுறுப்பான கைகள் இருந்தால்
சுதந்திர மகிழ்ச்சி குழந்தைகள் நாமே
சுதந்திர மகிழ்ச்சி குழந்தைகள் என்றால்
சுற்றத்தாரை மகிழ்ச்சிப் படுத்தும்
சுற்றத்தாரை மகிழ்ச்சிப்படுத்த
எட்டுத் திசையும் பரப்பு அன்பு அமைதி

உழைக்கும் கரங்கள் என்றால் – அது
ஓர் புது உலகை அமைக்கும்
ஒருவருக்கொருவர் உதவி
உள்ளன்போடு இருக்கும்
இதுவே இறைவனை ஈர்க்கும்
இந்த யுகத்தை புதிதாய் மாற்றும்

நம்மை நேசிக்கும் அளவை விட
நம் அயலவரை நாம் நேசித்து
ஒருவர்க் கொருவர் உதவி செய்தால்
இறைவன் நமக்கு உதவிடுவார்.
புது–உலகை அமைக்க உதவிடுவார்.

# பிரகாசம்

உயர்வின் ஒளியை நாம் பிரதிபலிக்க

உள்ளமும் ஒளிரும் அன்பு கனிவைக் கொண்டே

ஒளிர்ந்து பிராகசத்துடன் மகிழ்ந்திருக்க

ஊராரும் உணர்வார் இறை ஒளியின் வெப்பம்

உருவின் புத்திரனே........ நீயே எந்தன் ஒளிவிளக்கு, என் ஒளியும் உன்னுள் இருக்கிறது

இறைவனின் அன்பு வழிந்தோடுவது

என்றென்றுமே நிலையானதது

எழுந்து நாம் சேவை செய்யும் அளவிலே தான்

வளருமே அதனொளி பிரகாசமும் தான்

தயங்காதீர் ஒளிருவீர் முழுபலத்தில்

உள்ளங்கள் அவர் ஒளியில் நிறையும் வரை

உருவின் புத்திரனே........ நீயே எந்தன் ஒளிவிளக்கு, என் ஒளியும் உன்னுள் இருக்கிறது

# மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் நானே

ஒரு விஷயம் ஒரு விஷயம் ஒரு விஷயம் – நம்
உயர்வான சமயத்திலே உள்ள விஷயம் – நீயும்
உணர்ந்து கொள்ள வேண்டுமென்ற புது விஷயம்

வெறும் சொற்கள் கொண்ட மனிதரல்ல நாமே – நல்ல
செயல்கள் கொண்ட மனிதராய் வாழ்வோமே – 2
(ஒரு விஷயம்)

மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் நானே
உறுதியாக வாழ வேண்டும் நானே
வாழும் காலம் முழுவதிலும் தானே – அவர்
வழியில் சேவை செய்ய வேண்டும் நானே
இதற்கு இறைவன் சட்டங்களை
இதயம் உணர்ந்து கடைபிடிப்போம் – 2
(ஒரு விஷயம்)

வார்த்தைக் கேட்டு சலித்துப் போன உலகம் – உன்
வாழ்க்கைப் பார்த்து நம்பவேண்டும் சமயம்
போற்றும் போலி ஜம்பம் கொண்ட உலகம் – உன்
புதிய வாழ்க்கை தெரிந்து உணர வேண்டும்
இதற்கு இறைவன் சட்டங்களை . . .
(ஒரு விஷயம்)

## பொறுமை

கால்களும் வலித்திடலாம்

கடக்கும் தூரம் நீண்டிடலாம் – 2

கதிரவன் சுட்டிடலாம்

கடமையை விட்டுவிட நினைத்திடலாம்

பொறுமை இழந்தால் அர்த்தமில்லை

புலம்பினாலும் பயனும் இல்லை

அடிமேல் அடியென எடுத்து வைத்தால்

அந்த நேரம் பயன்படலாம்

(கால்களும் . . .)

குழு : புகுந்த கவலை போக்க

பொறுமையே மருந்தாகும்

பொறுமை பரிசை ஈர்க்கும்

பொறுமை மகிழ்ச்சி கொடுக்கும்

(கால்களும் . . .)

<u>வசனம்</u>

உன் சகோதரன் புரிந்து கொள்ளவில்லை – நீயோ

ஒரு முறைக்கு இரு முறை விளக்க முயற்சி செய்கிறாய்

உண்மையிலே கடும் முயற்சி செய்தால் – நீ

உன்னதத்தை செய்கிறாய்

<u>பாடல்</u>

இதில் பொறுமை திழந்தால் அர்த்தமில்லை

கடுமை இருந்தால் பயனுமில்லை

அவனில் அன்பு காட்டினால்

அதுவே கற்பிக்கும் முறையாகும்.

(கால்களும் . . .)

<u>வசனம்</u>

இன்றும் சிறப்பிற்கு முயல்கிறார்

இருந்தும் இலக்கை அடையவில்லை

ஏன் தான் முயற்சி என்கிறாய் – இது

எங்கே செல்லும் என்கிறாய்

<u>பாடல்</u>

இதில் பொறுமை இழந்தால் அர்த்தமில்லை

குறைவாய் செய்வது இழிவாகும்

முயற்சி கடுமை இருந்திட்டால்

இலக்கு ஏற்றம் கண்டிடலாம்.